
# தீர்க்கத்தரிசிகள் தேவ செய்தியை அறிவித்தனர்

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் பாடம் P9b ஐ வாசிக்கவும்

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே, மேசியாவாகிய இயேசுவின் வரவை அறிவித்த தீர்க்கத்தரிசிகளிடம் இருந்து, நானும் எனது மந்தையும் உம்மைக் குறித்தும், எங்களுக்கான உமது திட்டத்தைக் குறித்தும் அறிய உதவும்."

## 1. பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசன புத்தகங்களை போதிக்க ஆயத்தமாகுக.

**தீர்க்கதரிசிகள் எழுதிய ஆண்டு**




படத்தில் நிழலிட்ட பகுதியான கி.பி. 835 & 400 லியே பெரும் பாலும் தீர்க்கத்தரிசிகள் எழுதிய காலம் ஆகும்.

ஏசாயா 6:1-8 ல் காண்க.

- தேவ தரிசனத்தைக் கண்ட ஒரு தீர்க்கத்தரிசியின் நிலை (வச.1-5),
- தேவன் அவனுக்கு எவ்வாறு தேறுதல் அளித்தார் (வச.7 & 6),
- ஏசாயா செய்வதாகக் கூறியது (வச. 8).

### சொற்பொருள் விளக்கம் (Definition)

தீர்க்கதரிசி. பழைய ஏற்பாட்டு காலத்தில், தேவன் தமது ஜனமாகிய இஸ்ரவேலுக்குத் தமது செய்தியை பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட "பரிசுத்த மனிதர்கள்" மூலம் அனுப்பினார். *2 பேதுரு 1:21.*

**தீர்க்கதரிசனம் :** தேவனுடைய தீர்க்கதரிசிகள் அவருடைய மக்களை பாவத்திலிருந்து திரும்பி அவருக்குத் கீழ்ப்படியுமாறு அழைத்தனர்; மக்கள் ஏன் துன்பமடைகிறார்கள் என்பதை விளக்கினர்; விசுவாசிகளுக்கு நம்பிக்கையையும் தேறுதலையும் அளித்தனர்; நியாயத்தீர்ப்பை முன்னறிவித்தனர்; மேசியா என்று அழைக்கப்பட்ட முழு நீதியாக ஆளும் ஒரு இராஜாவைப் பற்றிய வாக்குத்தத்தத்தைக் கூறினர்.

**வரும்பொருள் உரைத்தல்:** அதுவரை நடைபெறாத விஷயங்களை தேவ தீர்க்கதரிசிகள் கூறினர்: அவர்கள் நான்கு வகையில் வரும்பொருள் உரைத்தனர் (1) சில அவர்களுடைய வாழ்க்கை காலத்திலேயே நடந்தேறின (2) சில அவர்கள் இறந்த உடன் நடந்தன (3) சில பல 100 ஆண்டுகளுக்குப் பின் நடந்தன (4) சில இன்னும் நிகழாமல் இருக்கின்றன. *ஏசா 42:8-9.*

**உண்மைத் தீர்க்கதரிசிகள் :** எல்லா உண்மையான தீர்க்கதரிசிகளும் எபிரேயர்களே. அதாவது யூதர்கள். அவர்கள் கர்த்தருக்காக மட்டுமே பேசினர். வேறு எந்த தெய்வங்களுக்காகவும் பேசவில்லை. உண்மைத் தீர்க்கதரிசிகள் வருமென்று கணித்த விஷயங்கள் வந்து நடைபெற்றன. சிலர் வட இராஜ்யமான இஸ்ரவேலுக்கும், சிலர் தென் இராஜ்யமான யூதாவுக்கும், யோனா போன்ற ஒரு சிலர் எல்லா தேசங்களுக்குமாகப் பேசினர். *உபா. 18:17-21.*

**பொய்த் தீர்க்கதரிசிகள்:** கர்த்தரை விட்டு பிற தெய்வங்களுக்காகப் பேசியவர்களே பொய்த் தீர்க்கதரிசிகள். கர்த்தரின் பிரமாணங்களை மீறி மக்களை பிற தெய்வங்களிடம் வழி நடத்தினர். *உபா 13:1-4*

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன புத்தகங்களைப் பற்றிய சுருக்க உரை

**மோசேயைத் தவிர 17 பிற தீர்க்கதரிசிகள்** எழுதிய புத்தகங்கள் வேதாகமத்தின் அங்கமாயின. கீழே பட்டியல் இடப்பட்டுள்ள தேதிகள், மேசியாவாகிய இயேசு வரும் முன் அவர்கள் எத்தனை வருஷம் பேசினார்கள் என்பதைக் காட்டுகின்றன.

**835 (கிறிஸ்துவுக்கு முன் வருடங்கள்).** யோவேல் யூதேயாவில் வெட்டுக் கிளிகளின் படை எடுப்பை முன்னுரைத்து, மக்களை மனம் திரும்பும்படி அழைத்தார். **அப். 2:16-21 ல் பேதுரு, யோவேல் 2.:28-32** ஐ எவ்வாறு மேற்கோள் காட்டியுள்ளார் என்பதைக் காண்க.

**783-753 வருடங்கள்.** யோனா, புறஜாதியரான நினிவே பட்டிணத்தாரை மனம் திரும்பும்படி அழைத்தார். **யோனா 1:17** ஐ எவ்வாறு இயேசு மேற்கோள் காட்டியுள்ளார் என்பதை மத். 12:40-41 ல் காண்க.

**760-750 ஆமோஸ்,** இஸ்ரவேலின் அழிவையும் எதிர்கால நம்பிக்கையையும் குறித்து அறிவித்தான். **ஆமோஸ் 9:11 & 12** ஐ யாக்கோபு எவ்வாறு மேற்கோள் காட்டுகிறார் என்பதை அக். 15:13-19 ல் காண்க.

**755-710 ஒசியா,** இஸ்ரவேலின் அவிசுவாசத்தையும் எதிர்கால மீட்பையும் விவரித்தான். **ஒசியா 2:23** ஐ பவுல் மேற்கோள் காட்டுவதை ரோமர் 9:22-26 ல் காண்க.

**740-680 ஏசாயா,** இரட்சிப்புக்காகக் கர்த்தரை நம்பும்படியாகவும், மேசியாவுக்காக காத்திருக்கும்படியாகவும் யூதாவை அழைத்தார். ஓர் எத்தியோப்பிய அதிகாரிக்கு **ஏசாயா 53:7, 8** ஐ பிலிப்பு விவரிப்பதை அப். 9:30-35 ல் காண்க.

**739:686 மீகா,** வரும் நியாயத்தீர்ப்பைப் பற்றி இஸ்ரவேலையும் யூதாவையும் எச்சரித்து அவர்களுக்கு நம்பிக்கையை அளித்தான். **மீகா 7:6** ஐ இயேசு எவ்வாறு மேற்கோள் காட்டுகிறார் என்பதை மத். 10:35-39 ல் காண்க.

**664-612 நாகூம்,** நியாயத்தீர்ப்பைப் பற்றியும், யூதாவுக்கும், நினிவேக்கும் நற்செய்தியையும் அறிவித்தார். **நாகூம் 1:15** ஐ பவுல் எவ்விதம் உபயோகித்தார் என்பதை ரோமர் 10:15 ல் காண்க.

**640-628 செப்பனியா,** யூதாவுக்கு மகா நாளாகிய ஒரு தேவ நியாயத்தீர்ப்பை அறிவித்து, மக்களை உண்மையைப் பேசுமாறு கூறினார். **செப்பனியா 3:13** ஐ யோவான் உபயோகிப்பதை வெளி. 14.5 ல் காண்க.

**626-580 எரேமியா,** யூதாவுக்கு வரப்போகும் சிறையிருப்பைக் குறித்து எச்சரித்தார். எதிரிகளை சரணடையும் படியும், ஒரு புதிய உடன்படிக்கையின் வாக்குத்தத்தத்தையும் கூறினார். **எரேமியா 31:31-34** ல் எவ்வாறு புதிய உடன்படிக்கை வருமுன் உரைக்கப்பட்டது என்பதை எபிரேயர் 8:7-13 ல் காண்க.

**609-597 ஆபகூக்,** யூதாவுக்கும், நினிவேக்கும் எதிரான நியாயத் தீர்ப்பைக் கூறி, விசுவாசத்துக்குள் வருமாறு மக்களை அழைத்தார். **ஆபகூக் 2:4** ஐ பவுல் எடுத்தாளுவதை கலா. 3:11 ல் காண்க.

**605-530 தானியேல்,** புறஜாதி தேசங்களைப் பற்றிய தரிசனத்தையும், விசுவாசிகளின் எதிர்கால உயிர் மீட்சியையும் குறிப்பிடுகிறார். இயேசு தன்னுடைய வருங்கால வருகையை **தானியேல் 7.13** மேற்கோள் காட்டி பேசுவதை லூக்கா 21:25-28 ல் காண்க.

**587-565 எசேக்கியேல்,** யூதா தன் தேசத்துக்கு திரும்பி வருவதையும், தேவாலயத்தைத் திரும்பவும் கட்டும் திட்டத்தையும் எழுதுகிறார். **எசே. 20:34, 41; 37:27** வசனங்களை பவுல் மேற்கோள் காட்டுவதை 2 கொரி. 6:16-18 ல் காண்க.

**586-584 புலம்பல்,** எருசலேமின் வரவிருக்கும் அழிவை விவரிக்கிறது. **புல. 2:15** எவ்வாறு சிலுவையில் தொங்கும் இயேசுவுக்குப் பொருந்துகிறது என்பதை மாற்கு 15:29-30 ல் காண்க.

**586 ஒபதியா** ஏதோமின் மேல் நியாயத் தீர்ப்பையும், இஸ்ரவேலின் வெற்றியையும் வருமுன் உரைத்தது. **ஒபதியா 1:21** ன் இறுதி நிறைவேறுதலை வெளி. 11:15 ல் காண்க.

520-519 **சகரியா.** மேசியா என்ற எதிர்கால இராஜாவைப் பற்றிய பல விவரங்களை முன்னுரைத்தது. **சகரியா 9:9** ஐ இயேசு எவ்வாறு நிறைவேற்றுகிறார் என்பதை மத். 21:4-6 ல் காண்க.

**430-400 மல்கியா,** இறுதியாக எழுதும் தீர்க்கதரிசி. யோவான் ஸ்நானகனுக்கு **மல்கியா 3:1** ஐ இயேசு எப்படி பொருத்துகிறார் என்பதை மத். 11:10-11 ல் காண்க.

**புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள்:** ஒவ்வொரு கிறிஸ்தவ சபைக்கும் தேவன், அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், போதகர்கள், ஆசான்கள் ஆகியோரைத் தருகிறார். (எபே 4:11) கிறிஸ்தவ தீர்க்கதரிசிகள் புதிய வேதத்தை எழுதுவதில்லை. ஆனால் கிறிஸ்தவர்களுக்கு உதவும் வகைகளை கணித்துரைப்பார்கள் (அப். 27-30). தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர் மற்றவர்களுக்கு போதித்து, புத்திமதி சொல்லி தேற்றுகிறான் (1 கொரி. 14:3). எல்லா கிறிஸ்தவர்களும் ஒருவருக்கொருவர் தீர்க்கதரிசனம் சொல்லலாம் (1 கொரி. 14:24).

## 2. வரும் வாரத்தின் செயல்பாடுகளை உடன் ஊழியர்களுடன் திட்டமிடுக.

வேதாகமத்தைக் கற்க விரும்பும் விசுவாசிகளை ஒரு தீர்க்கதரிசன புத்தகத்தை வாசிக்கும்படி சொல்லவும். பகுதி I ல் தீர்க்கதரிசிகளைப் பற்றி கொடுக்கப்பட்டுள்ள சில விஷயங்களை எடுத்துச் சொல்லவும். அதற்குப் பின் அவர்கள் தாங்கள் வாசித்த புத்தகத்தில் காணப்படும் விவரங்களையும் பெரும் கருத்துக்களையும் மற்ற விசுவாசிகளுக்குக் கூறலாம்.

அந்த வட்டாரத்தில் புழங்கி வரும் மதத்தில் ஒரு தீர்க்கதரிசி இருந்தால், உங்களிடம் பண்டைய தீர்க்கதரிகள் எழுதிய புத்தகங்கள் உண்டு என்று கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களிடம் கூறலாம். அவர்கள் விருப்பப்பட்டால் வேதபுத்தகத்தை அவர்கள் எங்கே பெற்றுக்கொள்ளலாம் என்பதைக் கூறவும்.

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உங்கள் உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்

ஏசாயா தீர்க்கதரிசியை தேவன் எவ்வாறு அனுப்பினார் என்பது பற்றி நீங்கள் அறிந்து கொண்டதை வாசிக்கலாம் அல்லது நடித்துக் காட்டலாம் (மேலே தரப்பட்டுள்ளது).

வேதாகமத்தில் இருந்து ஒரு தீர்க்கதரிசன புத்தகத்தை படித்ததின் மூலம் தேவன் அவர்களை எவ்வாறு ஆசீர்வதித்தார் என்பதை விசுவாசிகள் கூறட்டும்.

மேலே தரப்பட்டுள்ள பகுதி 1 லிருந்து தீர்க்கதரிசனத்தின் பின்னணியையும் சொற்பொருள் விளக்கத்தையும் விவரிக்கவும்.

தீர்க்கதரிசன புத்தகங்களின் முக்கிய தலைப்புப் பொருளை (topic) சுருக்கமாக மீள்பார்வை செய்யவும்.

தாங்கள் தயாரித்ததை **சிறுவர்கள்** பெரியவர்களுக்கு வழங்கலாம்.

ஏசாயா 53:5 ஐ வாசித்து கர்த்தரின் பந்தியை ஆசரிக்கலாம். இயேசுவின் இரத்த பலியை பண்டைய தீர்க்கதரிசிகள் முன்னறிவித்ததை விளக்கவும்.

மூன்று அல்லது நான்கு பேர் கொண்ட **குழுக்களை** அமைத்து தீர்க்தரிசனங்கள் எவ்வாறு நிறைவேறின என்பதை கலந்துரையாடலாம். ஒருவருக்கொருவர் ஜெபிக்கவும்.:

எல்லோருமாக அப். 26:22 ஐ **மனப்பாடம் செய்க.**

Copyright © 2004 by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net